**STC.No.974/2024** **நாள் : 18.06.2026**

PW 1- திரு.பரமகுரு

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி</u>** :

1)எதிரிக்கு நான் கொடுத்த காலத்தில் எதிரி என்ன தொழில் செய்து கொண்டிருந்தார் என்றால் அவர் வெளிநாட்டில் இருந்து வந்து சிறிது காலம் தான் ஆகியிருந்தது அவர் என்ன தொழில் செய்தார் என்று தெரியாது. எதிரி வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்த காலகட்டம் தெரியுமா என்றால் தெரியாது. கடன் கொடுத்த பின்னிட்டு அவர் என்ன வேலை செய்திருந்தார் என்று தெரியுமா என்றால் அதற்கான அவசியம் இல்லை. அவரிடம் எத்தனை காசோலை வாங்கினேன் என்றாலும் அதை எங்கு வைத்து வாங்கினேன் என்றால் காசோலையை தோட்டத்தில் வைத்து வாங்கினேன்.

2) எதிரி எனக்கு நன்கு பழக்கம் இல்லை ஒன்றாக படிக்கவில்லை எனக்கு அவர் உறவுமில்லை என்றால் என்னுடன் படிக்கவில்லை அவரது அப்பா எனக்கு பழக்கம் ஆகையால் எதிரி எனக்கு பழக்கமானவர். நட்பு அடிப்படையில் கொடுக்கப்படும் கடன் சட்டப்படியான கடன் அல்ல என்றால் சரியல்ல. சட்டப்படியான கடன் என்பதால் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை : இல்லை.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA

Digitally signed by S SAPNA
Date: 2026.06.18 16:43:29 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.

18.06.2026